பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் (மு.கூ.பொ) செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.அனில் மேஷ்ராம், இ.ஆ.ப.,

செ.மு.எண்: அ5/ 7673 /2023 நாள்: 06.10.2023

பொருள்: பொதுப்பணி – பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை–5 கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.அ.ஜேக்கப் என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.
2. அரசாணை எண்.33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 08.03.2023.
3. மதுரை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரின் கடித எண்.பி.ந2/46997/2019, நாள்.26.11.2021.
4. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணை எண்.அ5/7248/2021, நாள். 12.03.2022.

ஆணை

மதுரை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக கட்டுபாட்டின் கீழ் இயங்கும் எம்.கல்லுப்பட்டி, அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் காவலராக பணியில் இருந்த போது 11.08.2002 அன்று காலமான திரு.எஸ்.அசரியா பிரின்ஸ் ஆபிரகாம் என்பவரது மகன் திரு.அ.ஜேக்கப் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை 4–ல் படிக்கப்பட்ட செயல்முறையின் மூலம் உத்தரவிடப்பட்டது.

2) திரு.அ.ஜேக்கப் என்பவரின் பிறந்த நாள்.05.07.1981, தனியர் பணியில் சேர்ந்த நாள்.15.03.2022 அன்று தனியரின் வயது 40 வருடம், 8 மாதங்கள் மற்றும் தனியர் உற்பத்தி மேலாண்மை படிப்பில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். எனவே, தனியர் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் , 2016–ன் படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைப் பெற்றிருப்பதால் வயது மற்றும் கல்வித்தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை. மேலும், தனியரின் கல்வி சான்றிதழ்கள் அரசுத் தேர்வுத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டு, மெய்தன்மை உடையது என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

3) எனவே, பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையின் (G.O. (Ms.) No.33 நாள்: 08.03.2023 Labour Welfare and Skill Development (Q1) Department) பிற்சேர்க்கை அறிவிப்பு எண் 16 மற்றும் தமிழ் நாடு அமைச்சுப்பணிவிதிகளில் விதி எண் 10 பிற்சேர்க்கை (II) இன் படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.அ.ஜேக்கப் என்பவருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 15/03/2022 முற்பகல் முதல் தனியரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

4) மேலும், பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார் என்று ஆணையிடப்படுகிறது.

5) தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி எண்.32-ன்படி, இவர் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

ஒம்/- அனில் மேஷ்ராம்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக

பெறுநர்

திரு.அ.ஜேக்கப்,
இளநிலை உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்,
சேப்பாக்கம், சென்னை – 5. ..................உரிய வழிமுறையாக

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது

அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

நகல்

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.
2. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை.
3. இ-பிரிவு கண்காணிப்பாளர்.
4. அ5 – இருப்பு கோப்பு